


**Population:**
118,400 (2000)
145,900 (2010)
179,700 (2020)

**Countries:** China

**Buddhism:** Tibetan

**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Kham, Khamba

**மக்கள்தொகை:** 91,000 in China (1987,Language Atlas of China)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, வட திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 4(Bristo, Khrihdu,Kuergu,Nagnchen)

**திபெத்திய புத்தமதம்:**100%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:**சில பகுதிகள் கி.பி.1862, புதிய ஏற்பாடு கி.பி. 1885, திபெத்திய பைபிள் கி.பி. 1948

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** KHG04

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்

**வசிப்பிடம்:** கி.பி.1987 ல் செய்யப்பட்ட மொழியியல் ஆய்வு 91,000 வட கம்பா மொழி பேசும் மக்கள் சீனாவில் இருப்பதாகக் காட்டுகிறது. இவர்கள் சிங்ஹாய் (Qinghai) மாநிலத்தின் பரந்துப் பரப்பளவுடைய திபெத்திய ஈஷோ (Yushu) தன்னாட்சி மாகாணத்தில் வசிக்கின்றனர். வட கம்பா மொழி வடக்கில் 5214 மீட்டர்கள் (17,100 அடிகள்) உயரத்திலுள்ள யாலாதசொ (Yagradagze) மலைவரை பேசப்படுகிறது. கூடவே ஒரு சிறிய எண்ணிக்கையிலான வட கம்பாக்கள் திபெத்தின் வடகிழக்கு எல்லையில் வசிக்கின்றனர். நாடோடி மேய்ப்பர்களான வட கம்பாக்கள் உயரமான பீடபூமியில் வாழ்கின்றனர்.

**அடையாளம்:** மானிடவியல் வல்லுநர் மிஷேல் பீஷெல் (Michel Pissel) கி.பி.1964 ல் கம்பாக்களை இவ்வாறு விவரிக்கிறார் "கம்பாக்கள் ஆறு அடி உயரமுடையவர்களாக இருந்தார்கள்… கனமான காலணிகளையும், நடக்கும்போது சாட்டைகளைப்போல அடிக்கிற பருமனான காக்கி நிற அங்கிகளையும் அணிந்து, புற்களை மிதித்து அழிப்பதற்காக நடப்பதுபோல் கால்களைச்சிறிது அகலமாக வைத்து நடந்தனர்… லாசவிலுள்ள திபெத்தியர்களைப்போல மங்கோலிய தோற்றமில்லாமல், கோரமான கண்களோடும் நீளமான மூக்கோடும், பின்னப்பட்டுத் தலையைச்சுற்றிக் கட்டப்பட்ட முடியோடு ஆதிவாசிகள் போன்ற தோற்றமுடையவர்களாயிருந்தனர்.'

**மொழி:** வித்தியாசமான மொழிகளைப் பேசி வெவ்வேறு இடங்களில் வாழும் நான்கு கம்பா இனங்களில் வட கம்பாவும் ஒன்றாகும். இடப்பெயர்ச்சி மற்றும் அநேக அரசியல் மாற்றங்களால் திபெத், இனத்துக்குரிய காரியங்களில் ஒரு சிக்கலான இடமாக மாறியுள்ளது.

**வரலாறு:** "திபெத்தில் ஏழு வருடங்கள்" என்ற புத்தகத்தின் மூலம் புகழ்பெற்ற ஹையின்ரிச் ஹேரியர் (Heinrich Harrier) கி.பி. 1940 களில் கம்பா பகுதிகளைக் கடந்து சென்றார். ஹேரியர் இப்பகுதியின் சட்ட ஒழுங்கற்ற நிலை மற்றும் திகிலில் வாழும் சர்வ சாதாரண மக்களின் நிலையை இவ்வாறு விவரிக்கிறார் "இவர்கள் குழுக்களாக மூன்று அல்லது நான்கு கூடாரங்களில் வசிக்கின்றனர். இதுவே இவர்களது தலைமையிடமாகும்…இங்கிருந்து துப்பாக்கி மற்றும் வாள்களைத் தரித்துக்கொண்டு நாடோடி மேய்ப்பர்களின் கூடாரங்களில் பலவந்தமாக நுழைந்து மட்டுமீறிய உபசரிப்பை வற்புறுத்துகின்றனர். நாடோடிகள் பீதியில் தங்களிடம் இருக்கும் எல்லாவற்றையும் வெளிக்கொண்டுவருகின்றனர். கம்பாக்கள் வயிற்றையும் பையையும் நிறைத்துக்கொண்டு பற்றாக்குறைக்குச் சில கால்நடைகளையும் எடுத்துக்கொண்டு பரந்த வெளிகளில் மறைந்துவிடுகின்றனர். மறுநாளில் மற்றொரு கூடாரமென, அந்த முழுப் பகுதியும் தோலுரிக்கப் படும்வரை ஒவ்வொரு நாளும் இவ்வாறு செய்கிறனர்…இவர்கள் இவ்வாறு யாத்திரிகள் மற்றும் துறவிகளையும் கன்னியாஸ்திரீகளையும் கூடக் கொலை செய்கின்றனர்'




**பழக்கவழக்கங்கள்:** கம்பா ஆண்களை முடியோடு பின்னபடும் சிகப்பு மற்றும் கருப்புக் குஞ்சங்களைக் கொண்டு எளிதில் அடையாளம் கண்டுகொள்ளமுடியும். கத்திச் சண்டையின்போது உச்சந்தலையைக் காக்கும்படி இதை அணிவதாகக் கூறுகின்றனர். கம்பாக்களுடைய மூடநம்பிக்கையின்படி காதணி அணியாத மனிதன் அடுத்தப் பிறவியில் கழுதையாகப் பிறப்பான். நீலப் பச்சை ரத்தினம், சிகப்புப் பவளம், எலும்பு மற்றும் வெள்ளி நகைகள் நாடோடி கம்பா பெண்களின் முடியை அலங்கரிக்கிறது.

**மதம்:** இவர்கள் திபெத்திய புத்தமதத்தைப் பின்பற்றினாலும் கூட, மதம் வெறும் பாவனையாக மட்டுமே உள்ளது, இருந்தும் திபெத்தியர்கள் தங்களைப் புத்தரைப் பின்பற்றுபவர்களாக நம்புகின்றனர், மற்ற எந்த வழியையும் ஏற்க மறுக்கின்றனர்.

**கிறிஸ்துவம்:** இயேசு கிறிஸ்து பிறந்து இரண்டாயிரம் வருடங்கள் கடந்திருந்தாலும் கம்பாக்கள் ஏறக்குறைய முழுமையாகச் சந்திக்கப்படாத நிலையில் உள்ளனர். பூகோள அமைப்பு, மொழி மற்றும் கலாச்சாரத் தடைகள் இவர்களைப் பிரித்துவிட்டது. முழுவதும் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் நடைமுறையில் ஊடுருவ முடியாத இந்த ஈஷோ மாகாணத்தில் எந்த விதச் சபையோ அல்லது நிலைத்திருந்த கிறிஸ்துவின் சாட்சிகளோ கிடையாது.